1978 மார்ச் 18]

திரு. துரை கலியமூர்த்தி : தலைவர் அவர்களே, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திலே 70 பஸ்கள் ஓடுவதாகச் சொல்கிறார்கள், அதிலே 10 பஸ்கள் ஓடவில்லை. மீதம் இருக்கிற பஸ்களில் ஸ்பேர் பஸ் எத்தனை, டவுன் பஸ் எத்தனை, மொபஸ்ஸல் பஸ் எத்தனை என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதோடு தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் 49 ஆயிரம் ரூபாய் நட்டம் வருகிறது என்று சொன்னார்கள். அப்படியிருக்கும்போது இப்போது வரியை ஏற்றி இருக்கிறார்கள். தொழிலாளர்கள் பங்குபெறும் நிறுவனம் என்று சொல்லப்படுகின்ற முறையிலே அந்தத் தொழிலாளர்களை ஏமாற்றுவதற்காக இந்த வரியா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அரசுக்கு வருமானம் வரவேண்டும், அந்த வருமானத்தின் மூலம் தொழிலாளர் நலன் காக்கப்பட வேண்டும் என்ற நன்நோக்கம்தானே தவிர தொழிலாளர்களை நசுக்கவில்லை என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இணைப்புச் சாலைகளுக்கு நிதி.

* வினா 620—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்—

கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ் நாட்டில் 1977-78-ல் கிராமப் பகுதிகளில் இணைப்புச் சாலைகள் அமைப்பதற்கு மத்திய சர்க்கார் ஒதுக்கிய தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :—

ரூபாய் 65 இலட்சம்.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவரவர்களே, இந்த லிங்க் ரோடுகளுக்குப் பணத்தைப் பிரித்துக் கொடுப்பதில் எந்தெந்த லிங்க் ரோடுகளுக்கு பிரையாரிட்டீஸ் கொடுப்பது என்று கைட் லைன்ஸ் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, மிகவும் உள்ளூர இருக்கும், இன்டீரியர் வில்லேஜ்களை மெயின் ரோடோடு லிங்க் பண்ணும் விதத்தில் இந்த பண்டில் பிரையாரிட்டி கொடுக்க கைட் லைன்ஸ் அனுப்ப வழி செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, கிராமப்புற இணைப்புச் சாலைகளுக்கு இந் நிதியை ஒதுக்குவது மத்திய அரசாகும். மத்திய அரசு நிதியை ஒதுக்கும் போது சில வரையறைகளை ஏற்கனவே வகுத்திருக்கிறது. அதன்படி கிராமப்புறங்களில் விவசாயம் முன்னேற்றம் அடைந்த

[1978 மார்ச் 18

பகுதிகளில் மார்க்கெட்டிற்கு அதிகமாகப் பொருள்களை எடுத்துச் செல்லும் சூழலில் இருக்கும் பகுதிகளுக்கு முன்னுரிமை இருக்க வேண்டு மென்ற வரையறை ஏற்கனவே உள்ளது. அந்த முறையில்தான் செயல் பட்டு வருகிறது.

திரு ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு சட்டமன்றத் தலைவரவர்களே, இந்த லிங்க் ரோடு என்று சொல்லும் பொழுது கேரளாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் உள்ள லிங்க் ரோடாகிய கொடைக்கானலிலிருந்து மூணர் வரையில் இருக்கும் ரோடு மிகவும் சீர் கெட்டிருக்கிறது. அந்த ரோட்டில் இருபக்கமும் விவசாயம் நடக்கிறது. கிட்டத்தட்ட 6,000 பேர், 8,000 பேர் வரைக்கும் வேலை பார்க்கிறார்கள். அந்த ரோட்டை சீர் செய்ய அரசாங்கம், மத்திய அரசாங்கத்திலிருந்து பணம் கேட்டு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற வழித்தடம் கேரள மாநிலத்தைஇணைக்கும் வழித்தடங்கள். அதைச் செம்மைப் படுத்த சீர்படுத்த ஏற்கனவே திட்டம் ஒன்றை அரசு வகுத்து வருகிறது.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, ஏற்கனவே 1,500 பேர், 2.000பேர் இருக்கும் ஊர்களுக்கான இணைப்புச் சாலைகளுக்கு தார்ச்சாலையாக கழக அரசு போட்டது. இப்பொழுது அந்தத் திட்டத்தின்படி எத்தனை சாலைகளுக்குத் தார்ச் சாலைகள் போடப் படும். மெயின் ரோடுகளோடு பக்கத்திலிருக்கும் அரிசனக் காலனிகளுக்குச் சாலையில்லாமல் இருக்கிறது. அவைகள் இந்தத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்படுமா?.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இணைப்புச் சாலைகளுக்குத் தார்ச் சாலைகள் போடப்பட்டதாகக் கூறுகிறார்கள். அதுபற்றித் தனியாகக் குறிப்புகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமப்புற இணைப்புச்சாலை என்பதற்கு மிகக் குறைந்த அளவில் ஒரு ஆண்டுக்கு 65 இலட்சம் ரூபாய் மத்திய அரசு ஒதுக்கித் தருகிறது. 65 இலட்சம் ரூபாயைக் கொண்டு இணைப்புச் சாலைகளைக் கிராமப்புறங்களில் எந்த அளவிற்குப் போட முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். மத்திய அரசை அதிக நிதி ஒதுக்கி கிராமப்புற இணைப்புச் சாலைகளைப் போட வேண்டுமென்று கேட்டுக்கொண் டிருக்கிறோம். அதன் அடிப்படையில் முன்னேறுகின்ற செயல் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, இந்த இணைப்புச் சாலைகள் என்று சொல்லும்பொழுது இணைப்புச் சாலைகளுக்கு அதிகப்பட்ச தூரம் என்று ஏதாவது நிர்ணயம் செய்யப்பட்டிருக் கிறதா? அப்படிப்பட்ட அளவிற்கு நிர்ணயம் செய்யப்பட்ட

1978 மார்ச் 18]

எத்தனை சாலைகள் தமிழ்நாட்டில் இணைப்புச் சாலைகள் இந்த வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று அரசாங்கத்திடம் குறிப்பு இருக்கிறதா? ஆலங்காயம் — போளூரை இணைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதே, அது இதுவரையில் ஏன் எடுக்கப்படவில்லை? சி. ஆர். எஃப்., அதாவது, சென்ட்ரல் ரோடு ஃபண்ட் மத்திய அரசு கொடுக்கிறது. அதைத் தவிர இணைப்புச் சாலைகளுக்கு என்று வேறு ஒரு தலைப்பிலே ஏதாவது கொடுக்கப்படுகிறதா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, இணைப்புச் சாலைகளுக்கு தூர வரையறையை மத்திய அரசு நிர்ணயித்திருக்கிறது. 5 கிலோ மீட்டர் உள்ள அளவிற்கு இணைப்புச் சாலை போடலாம் என்ற குறிப்பு இருக்கிறது. தற்பொழுது 137.1 கிலோ மீட்டர் நீளமுள்ள 60 சாலை வேலைகளை மேற்கொள்ள அரசிடம் திட்டமிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறிய இணைப்புச் சாலை பற்றிய குறிப்பினைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 621, 622 எண்களுள்ள வினாக்கள் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*)இடப்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. ஒழுங்குப் பிரச்சினை

ஒரு மானியக் கோரிக்கைமீது அவையில் விவாதம் நடைபெறாத போது அவ்விவாதம் நடந்ததாக மக்கள் குரல் நாளேட்டில் செய்தி வந்திருப்பது குறித்து.

திரு. க. சுப்பு : பாய்ன்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். அவை உரிமை மீறல் பிரச்சினையே கொண்டு வரவேண்டியது. ஆனாலும் கூட பத்திரிகைகள்மீது அடிக்கடி அவை உரிமை மீறல் பிரச்சினை கொண்டுவரக் கூடாது என்பதால், ஒழுங்குப் பிரச்சினையாக இதைக் கொண்டு வர விரும்புகிறேன்.